சொல்கிறது. எனவே அந்த எண்ணிக்கையை உயர்த்தி, தற்போது கொடுக்கப்படுகின்ற அந்த 1,200 என்பதை, 250 ரூபாயாகவே வைத்து மூவாயிரம் பேருக்காவது வழங்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்து பரிசீலிக்கப்பட்டு நிதித்துறையிடம் தெரிவிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முதுமக்கள் தாழிகள் கண்டுபிடிப்பு.

* 9320—திரு. குமரி அனந்தன் :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சிதம்பரனார் மாவட்டம், கடம்பூர் அருகே உச்சிப்பரம்பு என்ற இடத்திலும், சாயர்புரத்திலும் முதுமக்கள் தாழிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனவா ?

(ஆ) அது எக்காலத்தைச் சார்ந்தவை ?

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) மூன்றாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டதாகும்.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, மூன்றாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட முதுமக்கள் தாழிகள் கிடைத்திருக்கின்றன என்ற அந்தத் தகவலில் இருந்து பழங்காலத்து மக்கள் அந்தப் பகுதியிலே குடியிருந்திருக்க வேண்டுமென்கின்ற தகவல் நமக்குத் தெரிய வருகிறது. எனவே, அப்படி அவர்கள் இருந்தார்கள் என்பதற்கான, நகர அமைப்பு போன்ற ஏதேனும் சான்று கிடைத்துள்ளதா ? அவ்வாறாயின் அது எவ்வகை நாகரீகச் சிறப்புடையதாக இருந்தது ?

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது மிக விரிவான ஆராய்ச்சிக்குப் பின்னால் கண்டறியப்பட வேண்டிய ஒன்று, ஏனென்றால் பல ஆராய்ச்சிகள் பல்வேறு வகையில் வேறுபாடுகளை விளைவிக்கின்றன. இருந்தாலும்கூட, அந்த 3,000 ஆண்டுகள் என்பது வரலாற்றுக் கண்ணோட்டத்தில் மிகத் தொன்மையானது அல்ல ; அண்மைக் காலத்து, சங்க காலத்திற்குச் சற்று முற்பட்ட காலம் என்று சொல்லப்படக் கூடிய காலம்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
VAYMAIYE VELLUM
TRUTH ALONE TRIUMPHS

1991 சனவரி 21]

இப்பொழுது கிடைத்திருப்பது அந்த இடத்தில் மக்கள் வாழ்ந்தார்கள் என்பது, வாழ்ந்திருக்க வேண்டுமென்பது, சாதாரணமாக, தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், எல்லாப் பகுதிகளிலும் மக்கள் நீண்ட நெடுங்காலமாக வாழ்ந்து வருகிறார்கள். ஆனால், குறிப்பிடத்தக்க வரலாற்றுக் கண்ணோட்டத்திலே சொல்லப்படுகிற நாகரிகம் இந்தப் பகுதியில் 3,000 ஆண்டுகளுக்கு முன்னால் இருந்தது என்பதற்குத்தான் இந்த ஆய்வுகள் துணை செய்யும். உச்சிப்பரம்பு என்ற இடத்தில் 16 ஏக்கர் நிலப்பரப்பில் தாழிகள், கறுப்பு, சிவப்பு வண்ணக் கலயங்கள் ஆகியவை சிதைந்த நிலையில், உடைந்து போன துண்டுகளாகக் காணப்படுகின்றன. அத்துடன் இரும்பினாலான அம்பு முனைகளும் காணப்படுகின்றன. இது ஆதிச்சநல்லூர் அகழ்வாராய்ச்சிக்குச் சற்று முற்பட்ட காலத்தைத் தொட்டுக் காட்டுகிறது என்ற வகையிலேதான் கருதப்பட முடியும்.

9–25 மணி

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, ஒரு காலத்தில் கடலில் மூழ்கிய துவாரகை நகரத்தைப் பற்றி அகழ்வாராய்வு நடந்தது போலே நம்முடைய முதற் சங்கம் இருந்த கபாடபுரத்தைப் பற்றியும், இரண்டாம் சங்கம் இருந்த தென்மதுரையைப் பற்றியும் அகழ்வாராய்வு செய்வதற்கான முயற்சியிலே இந்த அரசு ஈடுபடுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : தலைவரவர்களே, அவையெல்லாம் நீண்ட நெடுங்காலத்திற்கு முற்பட்டவை. 2,200 அல்லது 2,300 ஆண்டுகளுக்குள் புதைந்து போன ஒரு நகரமாகக் கருதப்படுவது கடற்கரைப் பட்டினமாகிய பூம்புகார். அந்தப் பூம்புகார் ஆய்வுக்குத் தகுந்த ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. ஏற்கெனவே ஒரு முறை தொடங்கி, இடையிலே அது தவங்கி நின்று போய்விட்டது. கடல் அகழ்வாராய்ச்சி நடத்துகிற ஒரு துறை மத்திய அரசின் சார்பிலே இருக்கிறது; அந்தத் துறை மூலமாக இந்த ஆய்வினை மறுபடியும் நடத்துவதற்குத் தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு ஆலோசனைகள் நிகழ்த்தி, ஏறத்தாழ பத்து இலட்சம் ரூபாய் அதற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதை நினைவிலேயிருந்து நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டம் சுல்தான் பேட்டை ஒன்றியம் வேலப்பநாயக்கன்பாளையத்தில் குளம் தூர் எடுக்கப்பட்டபொழுது பண்டு பானைகள் காணப்பட்டனவா ? அது எந்தக் காலத்தைச் சேர்ந்தவை ? சரித்திர முக்கியத்துவம் ஏதேனும் அதற்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : தலைவரவர்களே, இவ்வளவு முக்கியமான ஒரு பிரச்சினைக்கு ஒரு தனிக் கேள்வி எழுப்பியிருக்கலாம் ; அதிலே உறுப்பினர் தவறி விட்டதற்காக நான் வருந்துகிறேன்.

பெண்களுக்கான தனிப் பேருந்துகள்

*10369—திருமதி பாப்பா உமாநாத் :

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சென்னை, மவுன்ட் ரோடு பகுதியிலிருந்து அலுவலகப் பணி நேரங்களில் பெண்களுக்கான தனிப் பேருந்துகள் விடுவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது விடப்படும் ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே,

(அ) சென்னை அண்ணா சாலைப் பகுதியில் பணி புரிகின்ற மகளிர்களுக்காக தற்போது பல்லவன் போக்கு வரத்துக் கழகம் பல்வேறு இடங்களிலிருந்து அண்ணா சாலை வழியாக காலையில் 15 வழித் தடங்கள் மூலம் 15 பயண நடைகளும், மாலையில் 16 வழித் தடங்களில் 18 பயண நடைகளும் மகளிர் பேருந்தாக இயக்கி வருகின்றது.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திருமதி பாப்பா உமாநாத் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேருந்துகள் கூடுதலாக வேண்டுமென்று கேட்கப் பட்டது. நான் கேள்வி கேட்ட நேரம் நீண்டகாலத்திற்கு முன்பு என்று நினைக்கிறேன். ஆகவே, அமைச்சரவர்கள் வளை குடாவைக் காரணம் காட்டாமல், ஓடிக்கொண்டிருப்பதைப் பற்றிச் சொன்னதற்கு மிகவும் நன்றி. ஆனால், வருங்காலத் திலும், பெண்கள், குழந்தைகள், சிறுவர்களுக்கான பேருந்துகள் எந்த நெருக்கடி ஏற்பட்டாலும் தொடர்ந்து விடப்பட வேண்டு மென்று அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். அப்படி அவை விடப்படுமா என்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, தற்போது எந்த நெருக்கடி காரணமாகவும், பல்லவன் போக்கு வரத்துக் கழகத்தைப் பொறுத்தவரையில், வார நாட்களில் பேருந்துகள் நிறுத்தப்படவில்லை. ஏற்கனவே செய்திப் பத்திரிகைகளிலே வந்துள்ளதைப்போல ஞாயிற்றுக்கிழமை மட்டுப் தான் பாதியாகப் பேருந்துகள் குறைக்கப்பட்டு இருக்கின்றன.